கிளையின் வரவு மற்றும் செலவு அறிக்கையினை கிளையின் பொருளாளர் பொறி.J.திலீப்குமார் அவர்கள் 24.07.2017 முதல் 20.07.2018 வரை அவைக்கு தாக்கல் செய்து ஒப்புதல் பெற்றார். கூட்டத்தில் உறுப்பினர்கள் திரு.A.குமார் அவர்கள் பணிமாற்றம் அடிப்படையில் ஓட்டுநர் பதவியிலிருந்து தொழில் நுட்ப உதவியாளர் பதவி மாற்றம் செய்து கொடுத்தமைக்கு மைய சங்கத்திற்கும், கிளை சங்கத்திற்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார். பொறியாளர்கள் க.இரவிச்சந்திரன் மற்றும் பொறி.S.குமார் அவர்களின் கேள்விகளுக்கு வடக்கு மண்டல செயலாளர் அவர்கள் உதவி செயற்பொறியாளர் பட்டியல் குறித்தும் மற்றும் உறுப்பினர்கள் கேள்விகளுக்கு விரிவாக விளக்கமளித்தார்கள்.

பொறியாளர்கள் கோ.குணசேகரன் மற்றும் P.கணேசன் ஆகியோர்களின் பணி ஓய்வு பாராட்டு விழா நடைபெற்றது. பாராட்டு விழாவில் பொறியாளர்கள் N.பாஸ்கர், S.குமார், S.கணேசன், மூத்தப் பொறியாளர் D.கருணாநிதி, S.முருகவேல் ஆகியோர் பாராட்டி பேசினார்கள். பின்னர் பொறி.கோ.குணசேகரன் மற்றும் பொறி.P.கணேசன்

அவர்களின் ஏற்புரைக்கு பின்னர் கிளை பொறுப்பாளர்கள் தேர்விற்காக தேர்தல் பார்வையாளராக வடக்கு மண்டல செயலாளர் பொறி.K.சேரலாதன், பொறி.D.கருணாநிதி ஆகியோர் நியமித்து தேர்தல் நடத்தப்பட்டது.

2018-19ஆம் ஆண்டிற்கான கிளை பொறுப்பாளர்கள் தேர்வு நடைபெற்று கீழ்கண்ட பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறி. பா. அசோகன் |
| துணைத் தலைவர் | : | பொறி. எஸ். முருகவேல், |
| செயலாளர் | : | பொறி. நா. பாஸ்கா |
| இணைச் செயலாளர் 1 | : | பொறி. எஸ். கிருஷ்ணசாமி |
| இணைச் செயலாளர் 2 | : | பொறி. எஸ். கணேசன், |
| பொருளாளர் | : | பொறி. ஜெ. திலீப்குமார், |

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

1) உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலுக்கு ஒப்புதல் ஆணை விரைவில் பெற்றுத்தர மத்திய சங்கத்தை இக்கிளையின் பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

2) பட்டயம் பெற்ற பணி ஆய்வாளர்களுக்கு இளநிலை வரைதொழில் அலுவலர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளராக பணி மாற்றம் ஆணை பெற்றுத்தந்த மத்திய சங்கத்திற்கு இப்பொதுக்குழு நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

3) செயற்பொறியாளருக்கான பதவி உயர்வு பட்டியலை விரைவாக தயாரித்து ஒப்புதல் பெற மத்திய சங்கத்தை இக்கிளையின் பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

4) உதவிப்பொறியாளர், உதவிசெயற்பொறியாளர், செயற்பொறியாளருக்கான சம்பள விகிதங்களை நீதிமன்ற ஆணைப்படி நிர்ணயம் செய்து 7-வது ஊதிய விகிதம்பெற விரைவாக நடவடிக்கை எடுக்கும்படி மத்திய சங்கத்தினை இக்கிளையின் பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

5) இளநிலைப்பொறியாளர், உதவி பொறியாளர், உதவி செயற்பொறியாளர்களுக்கு உரிய நேரத்தில் கமுக்க அறிக்கை (Confidential Report) அந்தந்த செயற்பொறியாளர், கண்காணிப்பு பொறியாளர்களால் காலதாமதமின்றி உரிய காலத்தில் தவறாது அனுப்பவும், தேர்வு நிலை ஆணைகள் உரிய நேரத்தில் வழங்கவும் நடவடிக்கை எடுக்கும்படி இப்பொதுக்குழு கேட்டு கொள்கிறது.

6) நேரடி நியமனம் மூலமாக காலியாக உள்ள இளநிலைப்பொறியாளர் பணியிடங்களை TNPSC மூலமாக நிரப்ப உரிய நடவடிக்கை எடுக்கும்படி இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

7) கோட்டம், வட்டம், உபகோட்டங்களில் காலியாக உள்ள உதவி வரைவாளர், இளநிலை வரைவாளர், தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்ப உடனடியாக நடவடிக்கை எடுக்க இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

நிறைவாக கிளையின் இணைச்செயலாளர் பொறி.எஸ்.கணேசன் அவர்கள் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே முடிவடைந்தது.

## விருதுநகர் கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், விருதுநகர் கிளையின் பொதுக்குழு கூட்டம் மற்றும் பொறுப்பாளர்கள் தேர்தல் கூட்டம் 19.07.2018-ம் தேதி மாலை 6.00 மணியளவில் தமிழ்நாடு பொறியியல் சங்கம் விருதுநகர் சங்க கட்டிடத்தில், பொறியாளர் அப்பாஸ்மந்திரி அரங்கத்தில் கிளைத்தலைவர் பொறி.ஆர்..வி.இரவிச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் பொறி.சு.லீலாவதி மற்றும் தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் வெளியீட்டுச் செயலாளர் பொறி.எஸ்.கே.கருப்புசாமி அகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் கிளை செயலாளர் பொறி.ஆர்.சரவணமுருகன், அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள். பொருளாளர் பொறி.S.சுப்பிரமணியன் அவர்கள் கிளையின் வரவு, செலவு அறிக்கையை சமர்ப்பித்து அவையில் ஒப்புதல் பெற்றார்.

பின்னர் சிறப்பு அழைப்பாளர்கள் முன்னிலையில் விருதுநகர் கிளையின் 2018-19-ஆம் ஆண்டிற்கான கிளைப் பொறுப்பாளர்கள் தேர்தல் நடைபெற்று கீழ்க்கண்ட புதிய பொறுப்பாளர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறி.M. கோபாலகிருஷ்ணன் |
| துணைத் தலைவர் | : | பொறி.K. கோபாலகிருஷ்ணன், |
| செயலாளர் | : | பொறி.R.V. இரவிச்சந்திரன், |
| இணைச் செயலாளர் - I | : | பொறி.K. மதன். |
| இணைச் செயலாளர் - II | : | பொறி.M. இரவி. |
| பொருளாளர் | : | பொறி.S. சுப்பிரமணியன். |

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

1. உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலை விரைந்து பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மையச் சங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

2. பிரிவுக்கு ஒரு தொழில்நுட்ப உதவியாளர் பதவி உருவாக்கிட உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

3. இளம் பொறியாளர் பதவியிலிருந்து உதவிப் பொறியாளர்களாக (Redesignation) பெற்றவர்களுக்கு உதவிப் பொறியாளர்களாக மாற்றம் செய்யப்பட்ட தேதியிலிருந்து பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பின்னர் கிளையின் துணைத் தலைவர் பொறி. K.கோபாலகிருஷ்ணன் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

## தருமபுரி கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், தருமபுரி கிளையின் பொதுக்குழுக் கூட்டம் தருமபுரியில் 07.07.2018 காலை 11.00 மணியளவில் இறை வணக்கத்துடன் ஆரம்பமானது. கிளை தலைவர் பொறியாளர் P. சண்முகம் அவர்கள் தலைமையேற்றார். உறுப்பினர் அறிமுகம் செய்யப்பட்டது. கிளை செயல்பாடுகள் பற்றி கிளை செயலாளர் பொறி.T.வெங்கடேசன் அவர்கள் உரையாற்றினார். இக்கூட்டத்தில் 15 உறுப்பினர்கள் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பித்தனர்.

பின்னர் மையச்சங்க நடவடிக்கை பற்றி மேற்கு மண்டலச் செயலாளர் P. நடராஜன் மற்றும் மாநிலத் தலைவர் C.கணபதி ஆகியோர் நீண்ட நேரம் உரையாற்றினார்கள். மேற்கு மண்டல செயலர் மற்றும் மாநிலத் தலைவர் ஆகியோர் கிளையின் 2018 - 2019 ஆம் ஆண்டிற்கான புதிய பொறுப்பாளர்கள் தேர்தலை நடத்தி கீழ்க்கண்ட பொறியாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர் புதிய பொறுப்பாளர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறி. P. சண்முகம் |
| துணைத் தலைவர் | : | பொறி. U. நகுலன் |
| செயலாளர் | : | பொறி. T. வெங்கடேசன் |
| இணைச் செயலாளர் 1 | : | பொறி. T. அறிவுமணி |
| இணைச் செயலாளர் 2 | : | பொறி. G. சரோஜாதேவி |
| பொருளாளர் | : | பொறி. M. பாலகிருஷ்ணன் |

பின்னர் சமீபத்தில் பணி ஓய்வு பெற்ற பொறியாளர்கள் K.ராஜேந்திரன் மற்றும் R.பன்னீர்செல்வம் உதவி செயற்பொறியாளர் அவர்கட்கு மாநிலத் தலைவர் மற்றும் மேற்கு மண்டல செயலர் அவர்களால் பொன்னாடை போற்றி கவுரவிக்கப்பட்டது. பின்னர் ஓய்வு பெற்ற பொறியாளர்கள் தனக்கு சங்கம் ஆற்றிய உதவிக்கு நன்றி தெரிவித்தனர். பின்னர் கிளைச் செயலாளர் பொறியாளர் T. வெங்கடேசன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

1. அரசு ஆணை எண். 1க்கு உரிய விதித்திருத்தம் பெற்று தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2. பொதுப்பணித்துறைக்கு தலைமையாக ஒரு IAS அதிகாரியை நியமிக்க நடவடிக்கை எடுக்க இக்கிளை கேட்டுக் கொள்கிறது.

## புதுக்கோட்டை கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், புதுக்கோட்டை கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 28.07.2018 அன்று காலை 11.00 மணியளவில் புதுக்கோட்டை பொதுப்பணித்துறை வளாகத்திலுள்ள கிளைச்சங்க கட்டடத்தில் நடைபெற்றது. கிளையின் துணைத் தலைவர் பொறியாளர் டி.வீரையன் அவர்கள் வரவேற்புரையாற்றிய பின் கிளையின் தலைவர் பொறியாளர் கே.சத்தார் அவர்கள் தலைமையில் கூட்டம் துவங்கியது. கிளைச்சங்க நடவடிக்கைகளை கிளையின் செயலாளர் பொறியாளர் ஜி.அண்ணாமலை அவர்கள் விரிவாக எடுத்துரைத்தும் குறைந்தளவே உறுப்பினர்கள் கொண்ட சிறிய கிளையாக இருந்தும் கூட பொதுக்குழு கூட்டத்திற்கு அதிக அளவில் உறுப்பினர்கள் வருகை புரிந்ததற்கு பாராட்டும் தெரிவித்தார்.

கிளையின் பொருளாளர் பொறியாளர் கே.வெள்ளிமலை அவர்கள் வரவு, செலவு அறிக்கை சமர்ப்பித்து அவையின் ஒப்புதலை பெற்றார். சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்ட மாநிலத் தலைவர் பொறியாளர் சி.கணபதி அவர்களும் கிழக்கு மண்டல செயலாளர் பொறியாளர் ஏ.ஜி.ஏ.பாபுராஜ் அவர்களும் மையச்சங்க நடவடிக்கைகளை விரிவாக எடுத்துரைத்தனர். பொறியாளர்கள் சி.சின்னதம்பி, டி.எஸ்பார்த்தீபன், டி.வீரைய்யன் ஆகியோர் கேட்ட சந்தேகங்களுக்கு மாநிலத் தலைவர் விரிவாக விளக்கமளித்தார்.

மேலும் வருகிற ஆகஸ்ட் 18,19 தேதிகளில் மயிலாடுதுறையில் நடைபெறவுள்ள மாநில பொதுக்குழுவினை சிறப்பாக நடத்த உறுப்பினர்களின் கருத்துக்கள் பகிரப்பட்டன. அதனை தொடர்ந்து ஓய்வு பெற்ற உதவி செயற்பொறியாளர் கிளையின் பொருளாளர் K.வெள்ளிமலை அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்று நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. பொறியாளர்கள் ஜி.அண்ணாமலை, கே.சத்தார், என்.பாஸ்கர் ஆகியோர் ஓய்வு பெற்ற பொறியாளரை பாராட்டி பேசினார்கள். அதன் பிறகு 2018 - 2019 ஆம் ஆண்டிற்கான பொறுப்பாளர்கள் தேர்தலை மையச்சங்க பொறுப்பாளர்கள் நடத்த கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறி. கே. சத்தார் |
| துணைத் தலைவர் | : | பொறி. டி. வீரையன் |
| செயலாளர் | : | பொறி. ஜி. அண்ணாமலை |
| இணைச் செயலாளர் 1 | : | பொறி. டி. எஸ். பார்த்தீபன் |
| இணைச் செயலாளர் 2 | : | பொறி. சி. சின்னத்தம்பி |
| பொருளாளர் | : | பொறி. என். பாஸ்கர் |

கிளையின் பொருளாளர் பொறியாளர் என்.பாஸ்கர் அவர்கள் நன்றி நவில தேசியகீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

## கோவை- பொள்ளாச்சி கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், கோவை - பொள்ளாச்சி கிளையின் பொதுக்குழுக் கூட்டம் கோவையில் உள்ள பொறியியல் கட்டடமான பொறி.இரா.பழனிச்சாமி இல்லத்தில் 22.07.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் இறை வணக்கத்துடன் ஆரம்பமானது. கிளைத் தலைவர் பொறி.டி.சங்கரசுப்ரமணியம் அவர்கள் தலைமையேற்றார். உறுப்பினர் அறிமுகம் செய்யப்பட்டது. கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக மாநிலத் தலைவர் பொறி.சி.கணபதி அவர்கள் கலந்து கொண்டார். கிளைத்தலைவர் பொறி.டி.சங்கரசுப்ரமணியன் அவர்கள் தலைமை உரையாற்றினார். கிளை செயல்பாடுகள் குறித்து கிளைச் செயலாளர் பொறியாளர் கே.என்.ரஞ்சன் அவர்கள் உரையாற்றினார். பொறியியல் இல்லத்தின் வரவு செலவு கணக்குகளை கூட்டத்தில் வாசித்து ஒப்புதல் பெற்றார்.

கிளையின் பொருளாளர் பொறி.ஜி.பாலசுப்ரமணியன் அவர்கள் கிளையின் வரவு, செலவு கணக்குகளை கூட்டத்தில் வாசித்து ஒப்புதல் பெற்றார். மாநிலத்தலைவர் அவர்கள் சங்கத்தின் செயல்பாடுகள் பற்றியும், உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு சம்பந்தமாக நமது சங்கம் சந்திக்கும் வழக்குகளைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். கிளை உறுப்பினர்கள் பொறி.டி.சங்கரசுப்ரமணியம் மற்றும் பொறி.வாசுதேவன் அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்றதையொட்டி உறுப்பினர்களுக்கு சிறப்பு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து 2018-2019ம் ஆண்டிற்கான கீழ்க்கண்ட புதிய பொறுப்பாளர்கள் கிளைச் சங்கத்திற்காக போட்டியின்றி ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய பொறுப்பாளர்களுக்கு மாநிலத்தலைவர் அவர்கள் உறுதிதொழி ஏற்கச் செய்து வைத்தார்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறி. குலாம்முகமது பாஷா |
| துணைத் தலைவர் | : | பொறி. பி. பாலன் |
| செயலாளர் | : | பொறி. கே.என்.ரஞ்சன் |
| இணைச் செயலாளர் 1 | : | பொறி. ஜி.விஜயசேகர் |
| இணைச் செயலாளர் 2 | : | பொறி. ஆர்.ஞானசேகரன் |
| பொருளாளர் | : | பொறி. ஜி.பாலசுப்ரமணியன் |

இறுதியாக கிளையின் இணைச் செயலாளர் பொறி.ஜி.விஜயசேகர் அவர்கள் நன்றி கூற கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றி நாட்டுப் பண்ணுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

1. உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வை விரைந்து பெற்றுத் தர மையச்சங்கத்தை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2. பணி ஆய்வாளர்களுக்கு வரைதொழில் அலுவலர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு பெற்றுத்தந்த மையச்சங்க பொறுப்பாளர்களுக்கு கிளையின் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

3. கோவை -பொள்ளாச்சி கிளையின் வங்கி சேமிப்பு கணக்கினை (SB A/C No. 19681, IOB Main Branch, Coimbatore) புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட கிளையின் செயலாளர் மற்றும் பொருளாளர் கூட்டாக இயக்க இக்கிளையின் பொதுக்குழு கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்படுகிறது.

## திருச்சி கிளை

தமிழ் நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளையின் பொதுக்குழுக்கூட்டம் மற்றும் 2018-2019ம் ஆண்டு திருச்சி கிளைப் பொறுப்பாளர்கள் தேர்வுக் கூட்டம் மற்றும் திருச்சி கிளையில் பணிமூப்பு காரணமாக ஓய்வு பெற்ற பொறியாளர்களுக்கு விழா திருச்சி மன்னார்புரம், பொறியாளர் முருகானந்தம் இல்லம், ஹம்ஜா - கேசவராவ் - அடைக்கலதுரை அரங்கில் 28.07.2018 சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் நடைபெற்றது. இந்த பொதுக்குழுக் கூட்டத்திற்கு தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலத் தலைவர் பொறியாளர். சி.கணபதி அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்பித்தார். பொறியாளர் ஆர்.தயாளகுமார் திருச்சிக் கிளைத் தலைவர் அவர்கள் தலைமை தாங்கினார்.

பொறி.எஸ்.தங்கையன் இணைச் செயலாளர் அவர்கள் பொதுக்குழுக் கூட்டத்திற்கு வருகைபுரிந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார். பின்னர், கிளையின் துணைத்தலைவர் பொறி.என்.முருகேசன் அவர்கள் மனைவியின் மறைவிற்கும், உறுப்பினர் பொறி.பி.எஸ்.ராஜமாணிக்கம் அவர்களின் தந்தையின் மறைவிற்கும், மற்றும் நமது சங்க ஓய்வு பெற்ற பொறியாளர் வி.கலியமூர்த்தி அவர்கள் மறைவிற்கும் ஒரு நிமிடம் நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. இதனையடுத்து, கிளைத் தலைவர் பொறி.ஆர்.தயாளகுமார், தமது தலைமையுரையில், உறுப்பினர் வருகை குறித்து கவலை தெரிவித்தார். மேலும் பணி ஆய்வாளர் பதவியில் இருந்து தொழில்நுட்ப உதவியாளர்களாகவும், இளநிலை வரைதொழில் அலுவலர்களாகவும் பதவி உயர்வு ஆணை பெற்றுத்தந்த மையசங்கத்திற்கு நன்றி தெரிவித்தும், இளம்பொறியாளர்/ உதவிபொறியாளர் பதவியில் இருந்து உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வு ஆணையினை விரைந்து பெற்றுத்தர கேட்டுக்கொண்டார். பின்னர், கிளையின் செயலாளர், பொறி.கே.ஆர்.ஜெயராமன் அவர்கள், தமது உரையில், உறுப்பினர்கள் சங்கத்தின் பேரில் ஈடுபாட்டுடனும், ஒற்றுமையுடனும் இருக்க கேட்டுக்கொண்டார்.

பிறகு, கிளையின் பொருளாளர் பொறி.எஸ்.சி.எஸ்.முரளிதரன் அவர்கள் கிளையின் வரவு, செலவு கணக்கினை சமர்ப்பித்து ஒப்புதல் பெற்றார். இதனையடுத்து சிறப்பு அழைப்பாளர் பொறி.சி.கணபதி, மாநிலத்தலைவர் அவர்களுக்கு சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. பின்னர், மாநிலத்தலைவர் தமது உரையில், தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் செயல்பாடுகளையும், உதவிசெயற்பொறியாளர் பதவி உயர்வுக்கு சகோதரசங்கத்தின் உறுப்பினர்களால் தொடுக்கப்பட்ட வழக்குகள் மற்றும் அதன் தற்போதைய நிலைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

அதன்பிறகு, உறுப்பினர்கள் கருத்துப்பகுதியில் பொறி.டி.செல்லன், பொறி.எம்.ராஜா, பொறி.டி.படைகாத்தான், பொறி.என்.முருகேசன், பொறி.எஸ்.தங்கையன், பொறி.ஆர்.தயாளகுமார், பொறி.கே.ஆர்.ஜெயராமன் மற்றும் பொறி. ஏ.அடைக்கண் ஆகியோர்கள் தெரிவித்த கருத்துருக்களுக்கும், கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் மாநிலத் தலைவர் பொறி.சி.கணபதி அவர்கள் விரிவான பதிலுரை அளித்தார்கள்.

இதனையடுத்து, பணி மூப்பின் காரணமாக ஓய்வு பெற்ற பொறியாளார்கள், பொறி.சி.கணபதி, மாநிலத்தலைவர் அவர்களுக்கும், பொறி.என். செல்வராஜன் உதவி

செயற்பொறியாளர் அவ்கஞக்கும் பாராட்டுவிழா நடைபெற்றது. கிளையின் சார்பாக பொன்னாடையும், நினைவுப்பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. பொதுப்பணித்துறையில் மிக சிறப்பாக பணியாற்றி பணி நிறைவு செய்த பொறியாளர்களை பொறி.ஆர்.தயாளகுமார், பொறி.கே.ஆர். ஜெயராமன், பொறி.என்.சிவகுருநாதன் ஆகியோர் பாராட்டிப் பேசினார். பின்னர் பொறியாளார்கள் சி.கணபதி அவர்களும், என்.செல்வராஜன் உதவி செயற்பொறியாளர் அவர்களும் தங்களது ஏற்புரையில், துறையில் நடந்த அனுபவங்களையும், தமிழ்நாடு பொறியியல் சங்கத்தினால் அடைந்த நன்மைகளையும் மன நெகிழ்வுடன் பகிர்ந்து கொண்டனர்.

பின்னர், திருச்சி கிளையின் 2018-19 ஆண்டிற்கான புதிய பொறுப்பாளர்கள் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் அதிகாரிகளாக, பொறி.சி.கணபதி அவர்களும், என்.செல்வராஜன் உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்களும், தேர்தலை நடத்தி கீழ்க்கண்ட பொறியாளர்களை 2018-19ம் ஆண்டிற்கான திருச்சி கிளையின் புதிய பொறுப்பாளர்களாக தேர்வு செய்து அறிவித்தனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | பொறி.ஆர். தயாளகுமார் |
| துணைத்தலைவர் | : | பொறி.என். முருகேசன் |
| செயலாளர் | : | பொறி.கே.ஆர். ஜெயராமன் |
| இணைச்செயலாளர்-1 | : | பொறி.கே. ராமச்சந்திரன் |
| இணைச்செயலாளர்-2 | : | பொறி.எஸ். தங்கையன் |
| பொருளாளர் | : | பொறி.எஸ்.சி.எஸ். முரளிதரன் |

பின்னர், புதிய பொறுப்பாளர்கள், தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலத் தலைவர் பொறி.சி.கணபதி அவர்கள் முன்னிலையில் உறுதிமொழியும், பதவிப்பிரமாணமும் எடுத்துக்கொண்டனர். இதனையடுத்து, கிளையின் புதிய பொறுப்பாளர்களுடன் தலைவர் பொறி.ஆர்.தயாளகுமார், அவர்கள் தலைமையில் கூட்டம் தொடரப்பட்டு கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

1. பணி ஆய்வாளர் பதவியில் இருந்து தொழில்நுட்ப உதவியாளாராகவும் இளநிலை வரைதொழில் அலுவலராகவும் பதவி உயர்வு ஆணை பெற்று தந்த மையசங்கத்திற்கு இந்த கிளை தனது நன்றியினை காணிக்கையாக்குகிறது.

2. உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு விரைந்து பெற்றிட மையச்சங்கத்தினை கிளை கேட்டுக்கொள்கிறது.

3. சமவேளைக்கு சம ஊதியம் பெற்றுத்தர இந்த கிளை கேட்டுக்கொள்கிறது.

4. ஓய்வூதியம் கணக்கிடும் போது தினக்கூலி அடிப்படையில் பணியாற்றிய காலமான 10 வருடங்களில் பாதியாகிய 5 வருடங்களை கணக்கில் எடுக்க நடவடிக்கை எடுத்தல். மொத்த நாட்களில் பாதியை கணக்கில் எடுக்கக் கூடாது என வலியுறுத்தி இந்த கிளை கேட்டுக்கொள்கிறது.

இதனையடுத்து, கிளையின் பொருளாளர் பொறி.எஸ்.சி.எஸ்.முரளிதரன் நன்றி கூறினார். பின்னர் இரவு சிற்றுண்டிக்குப்பின் கூட்டம் இனிதாய் நிறைவுற்றது.

## சென்னை கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், சென்னை கிளையின் பொதுக்குழுக் கூட்டம், 04-08-2018 அன்று காலை 11.00 மணியளவில் சி.ப. சண்முகம் அரங்கில் நடைபெற்றது. கூட்டம் சென்னை கிளையின் தலைவர் பொறி. எஸ். சண்முகானந்தன் தலைமையில், மாநில பொது செயலாளர் பொறி. த. முருகேசன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மையசங்க பொறுப்பாளர்கள், கிளை பொறுப்பாளர்கள், மூத்த பொறியாளர்கள் மற்றும் சென்னை கிளை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அவை அறிமுகத்திற்கு பிறகு சங்க உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் உறவினர்கள் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்படடது.

மையச்சங்கப் பொறுப்பாளர்களுக்கும் மூத்தப் பொறியாளர்களுக்கும் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

தலைவர் பொறி. எஸ். சண்முகானந்தன் தமது உரையில் கிளைசங்கம் மையச்சங்கத்தோடு இணைந்து ஆற்றி வரும் பணிகள் குறித்து எடுத்துரைத்தார்.

கிளையின் நிதிநிலை அறிக்கையினை பொருளாளர் எஸ்.பாண்டியன் அவர்கள் வாசித்து அவையின் ஒப்புதல் பெற்றார்.

பொதுச்செயலாளர் பொறி. த. முருகேசன் அவர்கள் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்து உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கும் விபரமாக பதிலளித்தார்கள். மூத்தப் பொறியாளர்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தனர்.

மூத்தப் பொறியாளர் டி.பி.பாலசுப்ரமணியன் அவர்கள் முன்னிலையில் சென்னை கிளையின் 2018-19 ஆம் ஆண்டிற்கான கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டார்கள்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பொறி. S. சண்முகானந்தன் |
| துணைத்தலைவர் | - | பொறி. S. பார்த்தசாரதி |
| செயலாளர் | - | பொறி. A. மணிமாறன் |
| இணைச் செயலாளர்-I | - | பொறி. K. ஆதிச்செல்வி |
| இணைச் செயலாளர்-II | - | பொறி. A.N. கோவிந்தராஜன் |
| பொருளாளர் | - | பொறி. S. பாண்டியன் |

கிளைச் செயலாளர் பொறியாளர் A. மணிமாறன் அவர்கள் நன்றி உரை கூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே முடிவடைந்தது.

# Nikkah Invitation

In the Name of Allah, The most beneficent and merciful

**Mr. M.S. Mohamed Rafi, B.E.,**

**(Assistant Engineer, PWD, Tenkasi)**

**Joint Secretary TNEA, Thirunelveli Branch**

**and**

**Mrs. S. Shameema Begam**

(8/33/A1, Fathima Garden, Anna nagar, Thittuvilai, Nagercoil)

desire the sweet fragrance of your esteemed presence

with family and friends on the auspicious occasion

of the Nikkah of their beloved daughter

M. Fathima Siyana, B.E., M.Tech.,

(Grand D/O Late M. Shahul Hameed @ Sulthan and

Grand D/O Moulavi Al-Haj P. Shahul Hameed Alim)

with

M.B.Kither Mohammed @ Yaser, B.Tech., CAIIB.,

Assistant Manager, Reserve Bank of India, Thiruvananthapuram
(Grand S/O Late M. Kither Mohammed, Ex. President, Aloor Town Panchayat and S/O Late M.K.M. Basheer, Ex. Chairman Aloor Town Panchayat, 25, Vanigar Street, Krishnankoil)

Insha Allah

on Wednesday 15th August, 2018,

(Dulhaj 3, Hijri 1439) At **M.D.B Community Hall,**

Pon Arippu Street, Cape Road, Kottar, Nagercoil.

**Nikkah Between 11.00 a.m. to 12.00 noon**

With Best Compliments of

**M. Fathima Shifa** **S. Safwan Ahamed**

**S. Mohammed Fayaz** **M.R. Mohammed Firaz**

# WEDDING RECEPTION

Sri Ramajayam

**Smt. Lalithakannan**

**and**

**Shri. V.Kannan, B.E.,**

**(Assistant Engineer, PWD, Chennai)**

**Joint Secretary TNEA, Chennai Branch**

Cordially invite you with family and friends on the occasion

of the Wedding Reception of their daughter

Sow. K. Vinodhini, B.E.,

(Sysveda Information Technology Pvt. Ltd, Chennai)

with

Chi. Vignesh Narayanan, B.E.,

(GAVS Technilogies, Chennai)

S/o. Shri. P.S. Narayanan and Smt. Girija Narayanan

on Thursday, the 16th August, 2018, from 7.00 p.m.

at "New M.R.Mahal"

(Mani Rajam Mahal), New No. 50, Old No. 175,

Lake View Road, West Mambalam, Chennai - 33.

---

Muhurtham : 17.08.2018, Friday, Between 7.30 - 9.00 a.m

---

With Best Compliments from: Chi.K.Vignesh

Friends & Relatives

**Together we stand and together we gonna live,**

**Everything is gonna happen in away that we think,**

**Together with the bliss that you all gonna give,**

**Wish us to spend our lives happily even sfter our skins shrink**

## பணி ஓய்வு பெற்றவர்கள்

(அரசாணை (வாலாயம்) எண். 372 பொதுப்பணித் (எப்1) துறை நாள் 31.07.2018)

| வ.எண் | பெயர் (திருவாளர்கள்) | பதவி |
|---|---|---|
| 1. | T. கீதா ஜெயஸ்ரீ | இணைத் தலைமைப் பொறியாளர் (பாசனம்) |
| 2. | V. ராஜகுமார் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 3. | கரோலின் ராஜசிங் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 4. | W. டாப்ஸன் பர்னபாஸ் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 5. | V. ஸ்ரீதரன் | கண்காணிப்புப் பொறியாளர் |
| 6. | S. தொல்காப்பியன் | செயற் பொறியாளர் |
| 7. | D. பன்னீர் செல்வம் | செயற் பொறியாளர் |
| 8. | A. ரவிசுப்பிரமணியன் | செயற் பொறியாளர் |
| 9. | துரைராஜ் முரளி | செயற் பொறியாளர் |
| 10. | M. முரளிதரன் | செயற் பொறியாளர் |
| 11. | P. அம்பாபிரசாத் | செயற் பொறியாளர் |
| 12. | R. பொய்யாமொழி | மின் பொறியாளர் |
| 13. | P. ராஜசேகரன் | உதவி செயற் பொறியாளர் |
| 14. | R. மனோகரன் | உதவி செயற் பொறியாளர் |
| 15. | P.V. லலிதா | உதவி செயற் பொறியாளர் |
| 16. | V. மணிவண்ணன் | உதவி செயற் பொறியாளர் (மின்) |
| 17. | S. சந்திரசேகர் | உதவி செயற் பொறியாளர் (மின்) |
| 18. | V. சிவானந்தன் | தலைமை வரைதொழில் அலுவலர் |
| 19. | P.N. கிரிஜா தேவி | தலைமை வரைதொழில் அலுவலர் |

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**எஸ்.கே. பிரபாகர்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

## பணி ஓய்வு பெற்றவர்கள்

**செயல்முறை ஆணை எண்.எஸ்.1(2)/20002/2018 /நாள் 31.07.2018ன் படி 31.07.2018 பி.ப. அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விபரம்.**

| வ. எண் | பெயர் திருவாளர்கள் | பிறந்த தேதி | பதவிப் பெயர் |
|---|---|---|---|
| 1. | S. தயாமணி | 03.07.1960 | ஆட்சி அலுவலர் |
| 2. | A. இராஜேந்திரன் | 19.07.1960 | உதவிப் பொறியாளர் |
| 3. | P. தங்கவேல் | 23.07.1960 | இளநிலைப் பொறியாளர் |

**ஒம்/- ம.பக்தவத்சலம்**
**முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது., மற்றும்**
**தலைமைப் பொறியாளர் (பொது), பொபது**

## தமிழ்நாடு பொறியியல் சங்கம், பொ.ப.துறை, சேப்பாக்கம், சென்னை-5.
## தலைமைச் சங்க பொறுப்பாளர்கள் தேர்தல் 2018-2019

சங்க பொதுக்குழுக்கூட்டம் மயிலாடுதுறையில் ஆகஸ்டு 18 மற்றும் 19 தேதிகளில் நடைபெறும். அது சமயம் 2018-2019 ஆம் ஆண்டிற்கான கீழ்க்கண்ட தலைமைச் சங்க பொறுப்பாளர்கள் பதவிக்கு தேர்தல் நடைபெறும்.

1. தலைவர்
2. துணைத்தலைவர்
3. பொதுச் செயலாளர்
4. செயலாளர் (அமைப்பு & சட்டம்)
5. செயலாளர் (வெளியீடு)
6. செயலாளர் (நிதி)
7. செயலாளர் (பொங்கும் நிதி)

**மண்டலச் செயலாளர்கள்**

9. வடக்கு 10. கிழக்கு 11.தெற்கு 12. மேற்கு 13. மையம்

**நெறிமுறைகள்**

1. போட்டியிட விரும்பும் உறுப்பினர் கடந்த 2016-2018 மூன்று ஆண்டுகள் தொடர்ந்து சங்க உறுப்பினர்களாகவோ அல்லது வாழ்நாள் உறுப்பினராகவோ இருக்க வேண்டும்.
2. மையச்சங்க பொறுப்பாளராக போட்டியிட விரும்புவோர் கிளைச்சங்கத்தில் குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகள் பொறுப்பாளராக இருந்திருக்க வேண்டும்.
3. வேட்பாளர் பொங்கும் நிதி உறுப்பினராக இருத்தல் வேண்டும்.
4. வேட்பாளர் பெயர் உரிய வேட்பு மனுவின் வேட்பாளர் சம்மதத்துடன் மையச்சங்க பொறுப்பாளர் அல்லது கிளைச்சங்க பொறுப்பாளர் ஒருவராலோ (அ) பலராலோ முன்மொழிந்து, வழி மொழிந்திருத்தல் வேண்டும்.
5. உறுப்பினர்கள் எத்தனை பதவிகளுக்கு போட்டியிட்டாலும் வெற்றி பெற்ற பின் அவரது விருப்பப்படி ஏதாவது ஒரு பதவியைத்தான் தக்க வைத்துக் கொள்ள முடியும்.
6. வரிசை எண்.3 லிருந்து 7 வரையிலுள்ள பதவிகளுக்கு போட்டியிட விரும்புவோர் சென்னை பெருநகர எல்லைக்குள் பணியாற்றுபவராக இருத்தல் அவசியம்.
7. மண்டல செயலாளர்கள் பதவிகளுக்கு போட்டியிட விரும்புபவர்கள் அந்தந்த மண்டல எல்லைக்குள் பணி புரிய வேண்டும்.

| மண்டலம் | | கிளைகள் |
|---|---|---|
| அ. மண்டலம் இல்லை | : | சென்னை |
| ஆ. வடக்கு மண்டலம் | : | காஞ்சிபுரம், வேலூர், கடலூர். |
| இ. கிழக்கு மண்டலம் | : | திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர் -நாகை, புதுக்கோட்டை |
| ஈ. தெற்கு மண்டலம் | : | விருதுநகர், திருநெல்வேலி -தூத்துக்குடி, கன்னியாகுமரி, |
| உ. மேற்கு மண்டலம் | : | தருமபுரி, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர்-பொள்ளாச்சி. |
| ஊ. மைய மண்டலம் | : | திண்டுக்கல், தேனி, மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம். |

வேட்பு மனுக்கள் நேரிடையாக எல்லா பதவிகளுக்கும் தேர்தல் நாள் 18.08.2018 அன்று தேர்தல் ஆணையரால் பிற்பகல் 2.00 மணி வரையிலும் பெற்றுக் கொள்ளப்படும்.

பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும் வாக்களிக்கத் தகுதி படைத்தவர்கள். தேர்தல் அலுவலரின் முடிவே இறுதியானதாகும்.

**வாக்காளர்கள்**

| | | |
|---|---|---|
| மையச் சங்க பொறுப்பாளர்கள் | : | 12 |
| கிளைச் சங்க பொறுப்பாளர்கள் 20 X 6 | : | 120 |
| | | 132 |

அனைத்து பொதுக்குழு உறுப்பினர்களும் கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு மையச் சங்க பொறுப்பாளர்களை தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**-பொறியாளர். எஸ்.கண்ணன், செயலாளர் அமைப்பு & சட்டம்**

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் சங்கம் கன்னியாகுமரி கிளையின் முன்னாள் தலைவர் பொறியாளர் A.மோகனதாஸ் உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.2450/- (ரூபாய் இரண்டாயிரத்து நானூற்றி ஐம்பது மட்டும்) வழக்கு நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளையின் முன்னாள் தலைவர் பொறியாளர் N.செல்வராஜன் உதவி செயற்பொறியாளர் (ஓய்வு) அவர்கள் தனது பொங்கும் நிதி முதிர்வு தொகை ரூ.1600/- (ரூபாய் ஆயிரத்து ஆறுநூறு மட்டும்) வளர்ச்சி நிதியாக வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் காஞ்சிபுரம் கிளையின் துணைத் தலைவர் பொறியாளர் S.சொர்ணம் உதவிப் பொறியாளர் அவர்கள் தனது மகன் திருமண நன்கொடையாக ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளையின் இணைச்செயலாளர் பொறியாளர் V.கண்ணன் உதவிப் பொறியாளர் அவர்கள் தனது மகன் திருமண நன்கொடையாக ரூ.2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) வழங்கியுள்ளார்.

---

தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருவாரூர் - நாகை கிளையின் 2018 -2019 ஆம் ஆண்டிற்கான புதிய பொறுப்பாளர்கள்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் சென்னை கிளையின் 2018 -2019 ஆம் ஆண்டிற்கான புதிய பொறுப்பாளர்கள்



தமிழ்நாடு பொறியியல் சங்கம் திருச்சி கிளையின் 2018 -2019 ஆம் ஆண்டிற்கான புதிய பொறுப்பாளர்கள்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் விருதுநகர் கிளையின் 2018 -2019 ஆம் ஆண்டிற்கான புதிய பொறுப்பாளர்கள்.




தமிழ்நாடு பொறியியல் சங்கம் புதுக்கோட்டை கிளையின் 2018 -2019 ஆம் ஆண்டிற்கான புதிய பொறுப்பாளர்கள்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் கடலூர் கிளையின் 2018 -2019 ஆம் ஆண்டிற்கான புதிய பொறுப்பாளர்கள்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் கோவை - பொள்ளாச்சி கிளையின் 2018 - 2019 ஆம் ஆண்டிற்கான புதிய பொறுப்பாளர்கள்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் கோவை - பொள்ளாச்சி கிளையின் முன்னாள் தலைவர் பொறியாளர் D.சங்கரசுப்ரமணியம் உ.செ.பொ அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் கோவை - பொள்ளாச்சி உறுப்பினர் பொறியாளர் N.வாசுதேவன் உ.பொ அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் சேலம் கிளை உறுப்பினர் பொறியாளர் A.இராஜேந்திரன் உ.பொ அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.




தமிழ்நாடு பொறியியல் சங்கம் தருமபுரி கிளை உறுப்பினர் பொறியாளர் P.தங்கவேல் இ.பொ அவர்கள் பணிஓய்வை முன்னிட்டு பொறுப்பாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.



Under Postal Regd No. TN/CH/(C)/358/18-20 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/ 2018-20 Date of Publiciation - 1 st Week of Every Month. R.N.I. Registration No.R.33590/78.



தமிழ்நாடு பொறியியல் சங்கம் பொதுப்பணித்துறை,
சேப்பாக்கம், சென்னை - 5.

## மாநில பொதுக்குழுக் கூட்டம் அறிவிப்பு

வருகிற ஆகஸ்டு திங்கள் 18 மற்றும் 19 தேதிகளில் நமது சங்கத்தின் மாநில பொதுக்குழுக் கூட்டம் மற்றும் மையச் சங்க பொறுப்பாளர்கள் தேர்தல் கிழக்கு மண்டலம் சார்பில் மயிலாடுதுறையில் நடைபெற உள்ளது.

இடம்: ஹோட்டல் பாம்ஸ் A/C,
பேருந்து நிலையம் எதிர்புறம்,
மயிலாடுதுறை - 609 001.

பொதுக்குழு உறுப்பினர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், மூத்தப் பொறியாளர்கள் அனைவரும் கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பொறி. எஸ். கண்ணன்
செயலாளர் அமைப்பு & சட்டம்

தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

**பொறியியல் கதிர்**
**PORIYIYAL KADHIR**

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

Posted on
11.08.2018

**REGD. NEWS PAPER**
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

PRINTED BY:Mr. J. VINOTH, AND PUBLISHED BY Er.S.K. KARUPPUCHAMY, D.C.E.AMIE., ON BEHALF OF TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, AND PRINTED AT AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. AND PUBLISHED AT TAMIL NADU ENGINEERING ASSOCIATION PWD, PWD CAMPUS, CHEPAUK, CHENNAI-5 EDITOR Er.S.K. KARUPPUCHAMY,